# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 13 ( 2006ம், அதற்கு முன் பிறந்தவர்களும்)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. ஆமோட்சின் மகன் பெயர் என்ன? **எசாயா**
2. எசாயா புத்தகத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?**66**
3. எசாயா எந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார்? **கி. மு 8ம் நூற்றாண்டில்**
4. எசாயா எங்கு வாழ்ந்தார்? **எருசலேம்**
5. எசாயா புத்தகத்தில் வரவிருக்கும் அரசர் யார் என்று குறிப்பிடுகின்றார்? **இயேசுக்கிறிஸ்து**
6. நான் தூய்மையற்ற உதடுகளை கொண்டவன், தூய்மையற்ற மக்கள் நடுவே வாழ்பவன் என்று சொன்னது யார்? **எசாயா**
7. இதோ நானிருக்கின்றேன், அடியேனை அனுப்பும் என்று சொன்னது யார்? **எசாயா**
8. எசாயாவின் மகன் பெயர் என்ன? **செயார்யாசி**
9. எபரேக்கியாவின் மகன் பெயர் என்ன? **செக்கரியா**
10. மத்தேயு நற்செய்தியாளரின் அடையாளம் (சின்னம்) எது?**மனிதன்**
11. ஆபிரகாமின் மகன் யார்? **ஈசாக்கு**
12. இயேசுவின் தலைமுறை அட்டவைணையில் இடம் பெறும் பெண்களின் பெயர்கள் எவை? **ரூத்து, தாமர், இராகபு, பத்சேபா (உரியாவின் மனைவி)**
13. யாருடைய காலத்தில் யூதர்கள் பாபிலோனுக்கு சிறைப் பிடித்துச்செல்லப்பட்டார்கள்? **எக்கோனியாவும், அவர் சகோதரர்களும் வாழ்ந்த காலத்தில்**
14. ஆபிரகாம் முதல் இயேசு வரை எத்தனை தலைமுறை? **42**
15. மரியாவின் கணவர் யோசேப்புக்கு வானதூதர் கனவில் கூறியவை? **உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள தயங்க வேண்டாம். அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான், அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர்**
16. மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்ததும் யோசேப்பு என்ன செய்ய திட்டமிட்டார்? **மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பவில்லை. மரியாவை மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்.**
17. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன? **கடவுள் நம்முடன் இருக்கின்றார்**
18. எந்த அரசன் காலத்தில் இயேசு பிறந்தார்? **ஏரோது**
19. இயேசு எங்கே பிறந்தார்? **பெத்லேகேம்**
20. கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் இயேசுவிற்கு காணிக்கையாக கொடுத்தவை எவை? **பொன், தூபம், வெள்ளைப்போளம்**
21. மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது என்று கூறியவர் யார்? **திருமுழுக்கு யோவான்**
22. திருமுழுக்கு யோவான் உடுத்திய உடை எது? **ஒட்டக முடியாலான ஆடை**
23. பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது, ஆண்டவருக்கான வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்» என்று கூறிய இறைவாக்கினர் யார்? **எசாயா**
24. திருமுழுக்கு யோவான் உண்ட உணவு யாது? **வெட்டுக்கிளி, காட்டுத்தேன்**
25. மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு யோவானிடம் என்ன பெற்றார்கள்? **திருமுழுக்கு**
26. திருமுழுக்கு யோவான் நான் தண்ணீரால் திருமுழுக்கு கொடுக்கின்றேன், எனக்கு பின் வருபவர் எதனால் திருமுழுக்கு கொடுப்பார் என்றார்? **தூய ஆவியால்**
27. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
28. இயேசு திருமுழுக்கு பெற்றவுடன் தண்ணீரை விட்டு வெளியேறிய போது என்ன இடம் பெற்றது? **வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி புறா வடிவில் இறங்குவது போல தம்மீது வருவதையும் கண்டார்.**
29. இயேசு பாலைவனத்தில் எத்தனை நாட்கள் நோன்பிருந்தார்? **40**
30. அலகை அவரை விட்டு அகன்ற பின் யார் வந்து இயேசுவுக்கு பணிவிடை செய்தனர்? **வானதூதர்**
31. கலிலேயா கடற்கரையில் வலைவீசிக் கொண்டிருந்த போதும் வலைகளை பழுது பார்த்துக்கொண்டிருந்த போதும் இயேசு சீடர்களாக அழைத்தவர்கள் யாவர்? **சீமோன், அந்திரேயா, யோவான், யாக்கோபு**
32. ஏழையின் உள்ளத்தோர், துயருறுவோர்,கனிவுடையோர், நீதி நிலை நாட்டுவோர் பெறும் கைமாறுகள் முறையே எவை? **விண்ணரசு, ஆறுதல், நாட்டின் உரிமை, நிறைவு**
33. எந்த வேளையில் நாம் மகிழ்ந்து பேருவகை கொள்ளும் படி இயேசு மலைப்பொழிவில் கற்பிக்கின்றார்? **இயேசுவின் பொருட்டு இகழ்ந்து, துன்புறுத்தி, இல்லாதவை, பொல்லாதவையெல்லாம் சொல்லும் போது**
34. கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்ற இறைவார்த்தைக்குரிய இறைவனின் பதில்கள் முறையே யாவை? **கொடுக்கப்படும், கண்டடைவீர்கள், திறக்கப்படும்**
35. ஐயா நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்று இயேசுவிடம் சொல்லிய தொழுநோயாளரிடம் இயேசு சொன்ன வார்த்தைகள் எவை? **நான் விரும்புகின்றேன். உமது நோய் நீங்குக. இதை எவருக்கம் சொல்ல வேண்டாம். கவனமாய் இரும்**
36. இயேசு முடக்குவாதமுற்றவரை நோக்கி கூறியது யாது? **மகனே துணிவோடிரு. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.**

**37.** மத்தேயு எங்கிருக்கும் போது இயேசு அவரை அழைத்தார்? **சுங்கச் சாவடியில் வரி வசூலித்துக்கொண்டிருக்கும் போது**
**38.** நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும் நலம் பெறுவேன் என்று சொல்லிய பெண்மணி எந்நோயால் துன்புற்றாள்? **12 ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால்**
**39.** இயேசு தம் சீடர் பன்னிருவருக்கும் என்ன அதிகாரம் அளித்தார்? **தீய ஆவிகளை ஓட்ட, நோய் நொடிகளைக் குணமாக்க**
**40.** திருமுழுக்கு யோவான் சிறையிலிருந்த போது யாருடைய செயல்களைப் பற்றி கேள்விப்பட்டார்? **மெசியா**
**41.** நீங்கள் கேட்பவற்றையும், காண்பவற்றையும் இயேசு யாரிடம் அறிவிக்கச்சொன்னார்? **திருமுழுக்கு யோவானிடம்**
42. இயேசு எந்த நகர்களைக் கண்டித்தார்? **கொராசின், கப்பர்நாகும், பெத்சாய்தா**
43. ஓய்வு நாளில் இயேசு யாரைக் குணமாக்கினார்? **கை சூம்பியவரை**
44. யாருக்கு எதிராக பேசுவோர் மன்னிக்கப்படார்? **தூய ஆவிக்கு எதிராக**
45. யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு மனம் மாறியவர்கள் யார்? **நினிவே மக்கள்**
**46.** விதைப்பவன் உவமையில் நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் எத்தனை மடங்காக பலனை கொடுத்தது? **100, 60**
**47.** விண்ணரசை எந்த உவமை வாயிலாக இயேசு விளக்குகிறார்? **முத்து உவமை, புதையல் உவமை, வலை உவமை, கடுகு விதை உவமை, புளிப்பு மாவு உவமை, வயலில் தோன்றிய களைகள் உவமை**
**48.** அப்பம் பலுகியதில் பயனடைந்தோர் யாவர்? **5000 ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுபிள்ளைகள்**
**49.** இயேசு கடகேறி மறுகரைக்கு சென்று எந்த பகுதி மக்களின் நோய்களை குணமாக்கினார்? **கெனசரேத்து**
**50.** இயேசு 4000 பேருக்கு எத்தனை அப்பம், மீன்களை வைத்து உணவளித்தார்? **ஏழு அப்பங்கள், சில மீன்கள்**
51. நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் என்று கூறியவர் யார்? **பேதுரு**
52. பேதுருவின் தந்தை பெயர் என்ன? **யோனா**
**53.** இயேசு தோற்றம் மாறிய போது உடனிருந்த சீடர்கள் யாவர்? **பேதுரு, யோவான், யாக்கோபு**
54. இயேசு தோற்றம் மாறிய போது அவருடன் உரையாடியவர்கள் யாவர்? **எலியா, மோசே**
55. இயேசு வரியாக செலுத்திய பணத்தின் பெயர் என்ன? **திராக்மா**
56. ஊதாரிப்பிள்ளை உவமையில் தந்தையின் விருப்பப்படி செயல்பட்டவர் யார்?**மூத்தவர்**
**57.** மணமகனை எதிர்கொண்ட 10 மணமகளின் தோழியர் உவமை கூறும் நீதி என்ன? **விழிப்பாயிருங்கள், மனுமகன் வரும் நேரம் யாருக்கும் தெரியாது.**
**58.** இயேசுவை சூழ்ச்சியாக பிடித்து கொலை செய்ய ஆலோசித்தவர்கள் யாவர்? **கயபா, தலைமைக்குருக்கள், மக்களின் மூப்பர்கள்**
**59.** இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாசு பெற்ற கூலி என்ன? **30 வெள்ளிக்காசுகள்**
60. பாஸ்கா விழாவின் போது விடுதலை செய்யப்பட்டவர் யார்? **பரபா**
**61.** இயேசுவை சிலுவையில் அறைந்த இடம் எது? **மண்டையோடு எனப்படும் கொல்கொத்தா மலை**
62. உயிர்த்த பின் இயேசு எத்தனை நாள்களாக திருத்தூதர்களுக்கு தோன்றி அவர்களுக் கற்பித்தார்? **40 நாள்கள்**
**63.** கலிலேயரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? இது யார் கூற்று? **வெண்ணாடை அணிந்த இருவர்**
64. யூதாசுக்குப் பதிலாக திருத்தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்? **மத்தியா**
**65.** பெந்தக்கோஸ்தே தினத்தன்று தூய ஆவியார் எந்த வடிவில் திருத்தூதர்கள் மேல் வந்து அமர்ந்தார்? **நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் வடிவில்**
66. பர்ணபா என்பதன் பொருள் என்ன? **ஊக்குவிக்கும் பண்பு கொண்டவர்**
67. நிலத்தை விற்று பொய் சொன்னதால் உயிர் விட்டவர் யார்? **அனனியா, சப்பிரா**
68. காவலில் இருந்த திருத்தூதர்களை விடுவித்தவர் யார்? **ஆண்டவரின் தூதர்**
**69.** யாக்கோபின் புதல்வர்கள் தம் சகோதரருள் யாரை யாருக்கு விற்றனர்? **யோசேப்பை, எகிப்தியருக்கு**
**70.** ஸ்தேவான் அருளுரையில் கோபம் கொண்டோர் ஸ்தேவானை எப்படிக் கொன்றனர்? **கல்லால் எறிந்து கொன்றனர்**
71. பிலிப்பிடம் திருமுழுக்கு பெற்றோர் யாவர்? **சீமோன், எத்தியோப்பிய நிதியமைச்சர், சமாரிய மக்கள்**
72. எந்த நகருக்கு செல்லும் போது சவுல் ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்டார்? **தமஸ்கு**
73. சவுல் மீண்டும் பார்வை பெற ஆண்டவர் அனுப்பிய சீடர் யார்? **அனனியா**
74. திருத்தூதர்களுக்கு பவுலை அறிமுகப்படுத்தியவர் யார் ? **பர்ணபா**
75. எங்கே முதன்முறையாக சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டார்கள்? **அந்தியோக்கியா**
**76.** லிஸ்திராவில் பவுல் செய்த புதுமை என்ன? **கால் ஊனமுற்றவரை நடக்கச்செய்தார்**
**77.** எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தை எல்லா இடங்களுக்கும் எடுத்துரைக்க தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்? **யாக்கோபு**
78. இரண்டாம் தூதுரைப் பயணத்தில் பவுல் யாரை துணைக்கு அழைத்துக்கொண்டார்? **சீலா**
**79.** இரண்டாம் தூதுரைப் பயணத்தில் பர்ணபா யாரை துணைக்கு அழைத்துக்கொண்டார்? **மாற்கு எனப்படும் யோவான்**
80. திருத்தூதர் பவுலின் தொழில் என்ன? **கூடாரம் செய்வது**
81. மாசிதோனியாவைச் சேர்ந்த பவுலின் வழித்துணைவர்கள் யாவர்? **காயு, அரிஸ்தர்க்கு**
82. இத்தாலியாவுக்கு பவுலை அழைத்துச்செல்லும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது? **யூலியு**
**83.** எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்கள் எங்கே எடுத்துச்சென்றனர்? **அந்தியோக்கியா, சிரியா, சிலிசியா**
**84.** பவுலுக்கு எதிராக ஆளுநரிடம் முறையிட்டவர் யாவர்? **தலைமைக்குருக்கள், மூப்பர்கள், வழக்குரைஞர் தெர்த்துல்**
85. புனித பவுல் தனது முதலாவது திருப்பயணத்தை எப்போது ஆரம்பித்தார்? **கி.பி. 47.**
**86.** புனித பவுல் தனது முதலாவது மறைதூதுப் பயணத்தில் அத்தாலியாவிலிருந்து எந்த இடத்திற்கு சென்றார்? **பிசிதிய அந்தியோக்கியாவிற்கு.**

**87.** புனித பவுல் தனது இரண்டாவது மறைதூதுப் பயணத்தை எப்போது யாருடன் ஆரம்பித்தார்? **கி.பி. 50 - 52 இடையில் தூய சீலாவுடன் ஆரம்பித்தார்.**
88. புனித பவுல் தனது மூன்றாவது மறைதூதுப் பயணத்தை எப்போது ஆரம்பித்தார்? **கி.பி. 53 - 57ல்.**
**89.** புனித பவுல் தனது மூன்றாவது மறைதூதுப் பயணத்தை எங்கு ஆரம்பித்து எங்கு நிறைவு செய்தார்? **சீரியா அந்தியோக்கியாவில் ஆரம்பித்து எருசலேமில் முடித்தார்.**
90. பவுல் தாம் எந்த இனத்தினர் என்று குறிப்பிடுகனிற்றார்? **இஸ்ராயேலன், ஆபிரகாமின் வழிமரபினன், பெஞ்சமின் குலத்தினன்**
**91.** புனித பவுல் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்? **சிரம் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.**
92. புனித பவுல் யாரால் கொலை செய்யப்பட்டார்? **உரோமையில் பேரரசன் நீரோவினால்.**
93. திருத்தூதர் பணி நூல் யாரால் எழுதப்பட்டது? **புனித லூக்கா**
94. பெரிய இறைவாக்கினர்கள் யாவர்? **எசாயா, எரேமியா, எசேக்கியேல்**
95. சிறிய இறைவாக்கினர்கள் யாவர்? **பாரூக், நாகூம், யோவேல்**
96. உலகிலேயே அதிகமாக விற்பனையான நூல் எது? **விவிலியம்**
97. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? **73**
98. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **46**
99. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **27**
100. திருவிவிலியத்தில் மிகப் பெரிய அதிகாரம் எது? திருப்பாடல் **119**
101. திருவிவிலியத்தில் மிகச் சிறிய அதிகாரம் எது? திருப்பாடல் **117**
102. திருவிவிலியத்தின் இறுதி நூல் எது? **திருவெளிப்பாடு**
103. சுவிஸ்சலாந்தில் எத்தனை மறைமாவட்டங்கள் உள்ளன? அவை எவை? **6 மறைமாவட்டங்கள். பாசல் மறைமாவட்டம், கூர் மறைமாவட்டம், லவுசான், ஜெனிவா, பிரைபோர்க் மறைமாவட்டம், லுகானோ மறைமாவட்டம், சன் காலன் மறைமாவட்டம், சியோன் மறைமாவட்டம்.**
**104.** சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் ஐந்தாவது இயக்குநர் யார்? **அருட்பணி சூசைதாசன் டக்ளஸ் மில்ரன் லோகு**
105. இறை ஒளி பத்திரிகையின் முதல் பிரதி எப்போது பிரசுரிக்கப்பட்டது? 01.03.2001
**106.** சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப்பணியகத்தின் இயக்குனராக பணியாற்றுபவர் இலங்கையின் எந்த மறைமாவட்டத்திலிருந்து அனுப்பி வைக்கப்படுவார்? **மன்னார் மறைமாவட்டம்**
**107.** இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட நல்ல கள்வன் பெயர் என்ன? **புனித தீஸ்மாஸ்**
108. தூய ஆவிபற்றி முன்னறிவித்த இறைவாக்கினர் யார்? **யோவேல்**
**109.** காயின் தன் மனைவியுடன் கூடி வாழ்ந்த போது பெற்றெடுத்த முத் மகனின் பெயர் என்ன?**ஏனோக்**
110. திருச்சபையின் கட்டளைகள் எத்தனை? **6**
111. கடவுள் மோச வழியாக கொடுத்த கடவுளின் கட்டளைகள் எத்தனை? **10**
112. ‘‘நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல, நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம்’’ என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது? **பவுலால் கொரிந்தியருக்கு (2கொரிந்தியர் 5:7).**
**113.** இவ்வாண்டு பெரிய வியாழன் அன்று திருத்தந்தை பாதம் கழுவும் சடங்கையும், திருப்பலியையும் எங்கே நிறைவேற்றினார்? **இத்தாலியில் ரெபிபியா பெண்கள் சிறைச்சாலையில் பெண்கைதிகளுக்கு பாதங்களைக் கழுவியும், பெரிய வியாழன் திருப்பலியையும் தலைமையேற்று வழிநடத்தினார்**
**114.** இரத்தின புரி மறைமாவட்டத்தின் புதிய ஆயர் யார்? **மேதகு. அன்ரனி வைமன் குரூஸ்**
115. திருத்தூதர் பார்த்தலேமேயு எவ்வுரைச் சார்ந்தவர்? **கானா**
**116.** திருச்சபை எத்தினங்களில் புனித சூசையப்பருக்கு விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றது? **பங்குனி 19, வைகாசி 1**
**117.** கற்போடிருப்பேன் என வாக்களித்து இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்தவர் யார்? **புனித சூசையப்பர்**
118. புனித சூசையப்பரின் தந்தை பெயர் என்ன? **ஏலி**
119. ஆதாம் ஏவாளின் பிள்ளைகள் பெயர்?**காயின், ஆபேல்**
120. ஆபேல் என்ன வேலை செய்தான்? **ஆடு மேய்ப்பவன்**
121. 09-03-2024ல் சுவிஸ் ஆன்மிகப்பணியகத்தினால் நடாத்தப்பட்ட இளையோருக்கான ஒன்று கூடலில் ஏறக்குறைய எத்தனை பேர் பங்கு பற்றினர்? **160**
122. ஒவ்வொரு கிறிஸ்தவனினதும் அடையாளச்சின்னமாக திகழ்வது எது? **சிலுவை**
**123.** 12 திருத்தூதர்களின் பெயர்களைக் குறிப்பிடுக? **பேதுரு என்னும் சீமோன், அவரின் சகோதரரான அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோபு, அவர் சகோதரரான யோவான், பிலிப்பு, பார்த்தலேமேயு, தோமா, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, யூதா (ததேயு), தீவிரவாதியான சீமோன், இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்கரியோத்து**
**124.** உயிர்த்தெழுந்த இயேசு திருத்தூதர்களுக்கு தோன்றியதும் முதலில் என்ன கூறினார்? **உங்களுக்கு அமைதி உரித்தாகுக**
**125.** சுவிஸ் தமிழ்ச்கத்தோலிக்க ஆன்மிகப்பணியகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட2024ம் ஆண்டிற்காக திருப்பயணத்தில் பங்குபற்றியவர்கள் எவ்விடங்களை தரிசித்து வந்தனர்? **லூர்து அன்னை திருத்தலம், ஸ்பானிஸ் றோசரஸ், பார்சிலோனா**

## பேச்சுப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### திருமணம்

திருமணம் எல்லாவற்றையும் படைத்துக் காப்பவரான இறைவனின் ஏற்பாட்டிலே, அவருடைய படைப்பின் வல்லமையையும், அன்பின் கனிவையும் வெளிப்படுத்தும் நிறுவனமான அமைந்துள்ளது. இறைவனின் படைப்பால் வரையறுக்கப்பட்ட இந்த இயற்கை நிறுவனமான திருமணம், மீட்பரின் மீட்புப் பணியால், அவரது மறையுடலில் செயல்படும் அருள்தரும் திருவருட்சாதனமாக உயர்த்தப்பட்டுள்ளது. மணமகனும் மணமகளும் ஒன்றித்து வாழ்நாள் முழுவதும் சேர்ந்து வாழ விரும்பி இறையாசியுடன் குரு முன்னிலையிலும்இ இரண்டு சாட்சிகள் முன்னிலையிலும் தங்கள் இல்லற வாழ்வைத் துவங்கும் நிகழ்வே திருமணமாகும்.

திருமண உடன்படிக்கையால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்கள் வாழ்வு முழுவதற்குமான ஓர் உறவுசமூகத்தைத் தங்களிடையே ஏற்படுத்துகின்றனர்: இவ்வுடன்படிக்கைஇ தன் இயல்பிலேயே மணமக்களின் நலனுக்காகவும் மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்புக்காகவும் அமைந்துள்ளது.

திருமணத்தின் இன்றியமையாத பண்புகள் ஒருமைத்தன்மையும் முறிவுபடாத்தன்மையுமாகும். இவை கிறிஸ்தவ திருமணங்களில் அருளடையாளத்தின் காரணமாகத் தனிப்பட்ட உறுதித்தன்மையைப் பெற்றுள்ளன.

எனவே, திருமணம் செய்துகொள்வோர், பிரிக்க முடியாத ஒன்றிப்பில் ஒருவர் ஒருவருக்குத் தம்மையே அர்ப்பணித்து, இறைவன் வகுத்த விதிகளின்படி குடும்ப வாழ்க்கை நடத்தி, உலகிற்கு மாந்தரைக் கொணர்ந்து மனித வாழ்வை நீடிக்கச் செய்கின்றனர்.

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து, ஒருவர் ஒருவருக்காக தியாகங்கள் பல புரிதல் வேண்டும். குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு தன்னலமற்ற அன்பைத் தருவதாலும், உறுதுணையாய் வாழ்வதாலும் இருவருக்குள் உண்மையான அமைதியும், அன்பும், இனிமையும் பொங்கிட வேண்டும்.

உலக சமூகத்திற்கும், திருச்சபை சமூகத்திற்கும் குடும்பம் தான் உயிர் நாடி: முதுகெலும்பு. அதனால்தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ‘குடும்பம் ஒரு குட்டி திருச்சபை’ என்கிறது. திருமணம் என்பது வெறும் கல்யாணம் பண்ணும் சடங்கு மட்டுமல்ல. மாறாக திருமணம் குடும்ப வாழ்வை குறித்துக் காட்டுகின்றது. அந்த குடும்ப வாழ்வும் திருக்குடும்ப வாழ்வை பிரதிபலிக்க வேண்டும்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்

குரல் கேட்டு அருளாயோ தலைவா

பகைசூழும் இதயத்துச் சுவரை எல்லாம் - என்

பாசத்தால் தகர்க்கின்ற வரம் கேட்கின்றேன்

புகை சூழ்ந்து இருள் வாழும் மனதில் எல்லாம் - உன்

பெயர் சொல்லி ஒளியேற்ற உனைக் கேட்கின்றேன்

நம்பிக்கை இழந்தோரென் முகம் பார்த்த பின் - நல்

நம்பிக்கைப் பெற வேண்டும் எனக் கேட்கின்றேன்

அன்பிற்காய் நான் வாழும் விதம் பார்த்த பின் - உன்

அன்பெண்ணி வர வேண்டும் உனைக் கேட்கின்றேன்